
கல்வெட்டு

திருவள்ளுவராண்டு 2025 (பவ ஆண்டு) ஆனித் திங்கள்



தத்தாத்ரேயர், கி.பி. 7 - ஆம் நூற்றாண்டு, பொன்னூர், வ. ஆ. அ. மாவட்டம்

காலாண்டிதழ் - 43 (1995, ஜூலை திங்கள்) விலை ரூ 1-50

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை

உள்ளே......

விழுப்புரத்தில் அரிய பைரவர் சிற்பம்

கோ. அர்ச்சுணன்

கல்வெட்டாய்வாளர்

விழுப்புரம் நகர எல்லையில் பூந்தோட்டம் என்ற இடத்தில் முத்துமாரியம்மன் கோயில் உள்ளது இக்கோயிலின் முன்பு ஓர் அரிய பைரவர் சிற்பம் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இப்பைரவர் சிற்ப வடிவம் நான்கு வகையில் சிறப்புடையதாகக் கருதப்படுகிறது.

1) இவ்வுருவம் எண்தோள்களில் வேறுபட்ட ஆயுதங்களை ஏந்தியுள்ளமை

2) ஆயுதம் அமைந்துள்ள பாங்கு

3) பைரவரின் வாகனம் இச்சிற்பத்தில் காட்டப்படாமை

4) பல்லவர் கலையிலிருந்து சோழர் கலைப்பாணிக்கு மாறும் காலகட்டம் ஆகியவற்றை இச்சிற்பம் காட்டுகிறது.

பைரவரின் கலைச்சிறப்பு

இப்பைரவரின் சிற்பம் செவ்வக வடிவமான பீடத்தின்மீது எண் கரங்களுடன் நேராக நின்ற கோலத்தில் காட்சி அளிக்கிறது. இதன் வலது கைகள் முறையே மேலிருந்து கீழாக அம்பு, வாள், திரிசூலம், கிளிமுகப்புடைய குறுவாள் ஆகிய நான்கு ஆயுதங்களைப் பற்றியுள்ளன. இடது நான்கு கைகளில் முறையே உடுக்கை, கேடயம், வில், கபாலம் ஆகிய ஆயுதங்களைக் கொண்டுள்ளன. பொதுவாக பைரவரின கரங்கள் நான்காகவோ ஒரு சில சிற்பங்களில் ஆறு கைகளுடனோ அமைவது வழக்கம். ஆனால் இச்சிற்பம் எண்கரங்களுடன் காணப்படுவது சிறப்பு அம்சம் ஆகும். பெரும்பாலும் பைரவரின் கரங்களில் உடுக்கை, பாசம், திரிசூலம், கபாலம் ஆகிய ஆயுதங்கள் மட்டும் காணப்படும். ஆனால் இங்கு வழக்கத்திற்கு மாறாக அம்பு, வில் போன்ற ஆயுதங்கள் காட்டப்படுவது குறிப்பிடத்தக்கது. இது ஓர் அரிய கலைப்படைப்பாகத் திகழ்கிறது.

பெரும்பாலும் வலது கை திரிசூலத்தைக் கடக முத்திரையில் கொண்டு விளங்கும். ஆனால் இங்கு திரிசூலம் வலது கையின் கீழ் செங்குத்தாக நிறுத்தப்பட்டுள்ளமையும் அதன் தலைப்பகுதியில் வலக் கரங்களில் மூன்றாவது கரம் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இடது கரங்களில் கேடயம் ஏந்தும் இரண்டாவது கரத்தைச் சுற்றியவாறு ஆடும் நாகம் ஒன்று கீழ்நோக்கிச் சரிந்து படமெடுக்கும் நிலையில் காட்டப்பட்டுள்ளது. மேலும் பைரவரின் இடது தோளில் ஒடும் பூணூலுக்கு பதில் கொடிய நாகம் ஒன்று இடது தோளிலிருந்து கீழ் வயிறுவரை இரண்டு சுற்றாகச் சுற்றிய வண்ணம் நாக பூணூலாகக் காட்சியளிக்கிறது. நாகத்தின் உடலும், தலையும், நீண்ட வாலும் இங்கு நுட்பமாகக் காட்டப்பட்டுள்ளன. அவ்வாறு பைரவரின் மேற்கரங்களில் படம் எடுத்தாடும் நாகம் தோள் வளையமாக அலங்கரிக்கிறது, இதை நாக வளையம் என்பர்.

பைரவரின் தலையில் விரிந்த ஜடாபாரம் வனப்புடன் காட்டப் பட்டுள்ளது. இதன் முனைகள் சுருண்ட கேசங்களாக வனப்பூட்டுகின்றன. ஆனால் பெரும்பாலும் பைரவரின் தலைக்கோலம் அனல் மகுடமாகத்தான் காணப்படுவது வழக்கம். ஆனால் இவ்வுருவம் மாறுபட்ட முறையில் திகழ்கிறது. மகுடத்தின் முன்புறம் சிறிய கபாலம் அமைத்துள்ளதும் காணத்தக்கது.

பைரவரின் நெற்றியைச் சுற்றிலும் உருண்டையான கண்ணி மாலையும் நெற்றிப்பட்டமும் அலங்கரிக்கின்றன. வலது காது அணியின்றி வடிந்த காதாகக் காட்டப்பட்டுள்ளது. இடது காதில் வட்டவடிவமாகச் சுருண்ட ஓலைக் குழை காணப்படுகிறது. கழுத்தை ஒட்டி கற்கள் பதித்த மணிமகுடமும், சரப்பளியும், சவடியும் அழகு செய்கின்றன. முன் கைகள் ஒவ்வொன்றிலும் உருளை வடிவமான இரு கைக்காப்புகள் அணி செய்கின்றன. இடையைச் சுற்றிலும் சலங்கை கோத்த அரைஞாண் கயிறு காட்டப்பட்டுள்ளது.

பரந்த முகமும், நெளிந்த புருவமும் விரிந்த கண்களும் சீற்றத்தோடு கூடிய பருத்த விழிகளும், கடைவாய்ப் பற்களோடு கூடிய திறந்த வாயும் கொண்டு இவ்வுருவம் நின்ற கோலத்தில் படைக்கப் பட்டுள்ளது. பைரவரின் மேல் உடலும், எண் தோள்களும்,

அங்கங்களின் அமைப்பும், தொடைப்பகுதியும், கால்களும் உடற்கட்டுடன் பொலிவோடு விளங்குகின்றன.

சிலையின் காலம்

இச்சிற்பத்தின் உருவ அமைதி, நிற்கும் நிலை, முகப் பொலிவு அங்கங்களின் அமைப்பு, ஆயுதங்களின் தன்மை ஆகியவைகளைக் கொண்டு இதனை கி.பி. 9-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த முந்தைய சோழர் கலைச்சிற்பமாகக் கருதமுடிகிறது. இச்சிற்பத்தில் பல்லவர்களின் கலைத்தாக்கம் மிகுந்து இருப்பதாலும் பல்லவர் கலையிலிருந்து சோழர் கலைக்கு மாற்றம் அடையும் காலத்தை அடையாளம் காணும் சிற்பமாகக் கருதலாம். இவ்வகையில் இது ஓர் அரிய சிற்பமாகக் கருதப்படுகிறது. விழுப்புரத்தைச் சார்ந்த ஒரு சிவாலயத்திற்குரிய இச்சிற்பம் காலவெள்ளத்தில் இடம் மாறி இந்த அம்மன் கோயிலில் உதிரிச் சிற்பமாகக் காணப்படுகிறது.

---

* இச்சிற்பத்தின் காலத்தைக் கணிப்பதில் சென்னைப் பதிவு அலுவலர் திரு. மா. சந்திரமூர்த்தி அவர்கள் உதவி செய்தார்.

மங்கைமடம் - ஓர் ஆய்வு

கோ. முத்துசாமி
கல்வெட்டாய்வாளர்

அமைவிடம்

மங்கைமடம் எனும் ஊர் நாகை, காயிதேமில்லத் மாவட்டம் சீர்காழி வட்டத்தில் அமைந்துள்ளது. இவ்வூர் சீர்காழியிலிருந்து பூம்புகார் செல்லும் சாலையில், சீர்காழிக்குத் தென்கிழக்கே 11 கி.மீ. தொலைவிலும் பூம்புகாரிலிருந்து வடமேற்கே 10 கி.மீ. தொலைவிலும் ஆக, கிட்டத் தட்ட நடுவில், சாலையின் ஓரத்தில் அமைந்துள்ளது. பேருந்து வசதிகள் உள்ளன. இவ்வூரைச் சுற்றி நான்கு திசைகளிலும் பல முக்கிய ஊர்கள் அமைந்துள்ளதால் இவ்வூர் முக்கிய சந்திப்பில் நடுநாயகமாக அமைந்துள்ளது எனலாம்.

பெயர்க் காரணம்

இவ்வூரில் வைணவ அடியார்ளுக்கு உணவு அளிக்க மடம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. இம்மடம் திருமங்கை ஆழ்வாரின் காலமான கி. பி. 8-ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆதலால் மடத்தோடு கூடிய இவ்வூர் மங்கைமடம் எனப் பெயர் பெற்றது. மங்கை என்பது திருமங்கை ஆழ்வாரைக் குறிக்கும். இம்மடத்தில் 1008 வைணவர்களுக்கு உணவு அளிக்கப் பட்டிருக்க வேண்டும். இவ்வூரிலிருந்து சீர்காழி செல்லும் சாலையின் வலது பக்கத்தில் மண்டபத்தடி குளம் என்ற குளம் உள்ளது. அதன் கரையில் மடம் ஒன்று இருந்து அழிந்து விட்டது. அதன் தடயங்கள் இன்றும் உள்ளன. எனவே அப்போது தொடங்கிய உணவு வழங்குதல், தற்போது திருநாங்கூர் கருடசேவை விழாவில் இராமனுஜர் மண்டபத்தில் வழங்கப்படுகிறது.[1]

ஊர் பெயராய்வு

இவ்வூர்ப் பேருந்து நிறுத்தத்திற்கு அருகில் ஒரு திருக்குளம் படித்துறையுடன் காணப்படுகிறது. இக்குளத்தின் கரையில் மங்கையர் தங்கும் மடம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது சுமார்

25 ஆண்டுகளுக்கு முன்புதான் பாழடைந்த அந்த மடம் இடிக்கப் பட்டு அவ்விடம் மற்றவர்களுக்கு வழங்கப்பட்டு தற்போது அப் பகுதியில் புதிய குடியிருப்புகள் உருவாகி வருகின்றன.

இவ்வூரைச் சுற்றியுள்ள 1) திருவெண்காடு 2) இளையமுது கூடம் 3) நாங்கூர் 4) திருவாலி 5) திருவாலி 6) திருக்குறைய லூர் 7) எம்பாவை போன்ற ஊர்களிலிருந்து உற்சவமூர்த்திகள் ஊர் தோறும் வீதியுலா வருவது வழக்கம். ஒவ்வொரு ஊரிலும் 10 நாள் திருவிழாக்கள் இன்றும் நடந்து வருகின்றன. அவ்வாறு செல்லுகையில் மங்கை மடத்தில் இரண்டு நாட்கள் தங்கிச் செல்வது வழக்கம்.

மடத்தில் ஆடல் மகளிர்

இவ்வாறு இறைவன் இங்கு தங்கும் காலங்களில் மடத்தின் மூலம், சாமி தூக்குவோருக்கும், பக்தர்களுக்கும் உணவு வழங்கப் படுவது உண்டு. இரவில் மடத்தில் தங்கியிருக்கும் நடன மங்கையர் கள் ஆடிப்பாடி எல்லோரையும் மகிழ்விப்பதும் தொன்றுதொட்டு நடந்து வந்த பழக்கமாகும். எனவே நான்கு திசைகளிலும் பல ஊர்களின் நடுவில் இவ்வூர் அமைந்துள்ளதால் திருவிழாக் காலங் களில் பொதுமக்கள் இங்கு ஒன்று கூடி, நடன மங்கையரின் ஆடல், பாடல் நிகழ்ச்சிகளைக் கண்டு களித்துள்ளனர்.

மங்கை - தேவரடியார்களா?

இங்குள்ள மடத்தில் நடன மாதுக்களான தேவரடியார்கள் தங்கியிருந்துள்ளனர் என்பது தெரிவாகத் தெரிகிறது அதாவது திருமணம் செய்து கொள்ளாமல் கோயில்களில் ஆடிப்பாடி தொண்டு செய்து மகிழ்விக்கும் மங்கையர்கள் இங்குள்ள மடத்தில் நிரந்தரமாக தங்கி திருவிழாக் காலங்களில் பொதுமக்களின் முன்னிலையில் ஆடிப்பாடி மகிழ்வித்துள்ளனர் என்பது ஆய்வில் தெரியவருகிறது.[2]

ஊரின் காலம்

சோழர்களின் காலத்தில் இருந்தே இவ்வூர் பெயரும் புகழும் கொண்டு விளங்கி வருகிறது. சிலப்பதிகாரம் குறிப்பிடும் ஆடல் மகளிரான மணிமேகலை போன்றோர் நிலையாகத் தங்கி ஆடல்

புகழ் பரப்பிய ஊராகவும் பூம்புகாரின் எல்லை இவ்வூர் வரை பரந்து விரிந்ததாகவும் கருத முடிகிறது.

யோகீஸ்வரர் கோயில்

இது மங்கை மடத்தில் அமைந்துள்ள சிவன் கோயிலாகும் பிற்காலச் சோழர் கலைப்பாணியில் சிற்பங்கள் அமைந்துள்ளன. குரு க்ஷேத்திரம் என்றும் இக்கோயில் உள்ள இடத்தை அழைக்கின்றனர். இக்கோயிலின் குளக்கரையில் சோழர்கால தூண்கள் கிடக்கின்றன. அதில் ஒரு தூணில் சோழர் கால எழுத்தில் கல்வெட்டு ஒன்று காணப்படுகிறது. தற்போது கண்டறியப்பட்டது.

கல்வெட்டு வருமாறு

1) ஸ்வஸ்தி ஸ்ரீ
2) பணையூரு
3) டை யான்
4) பெரியாழ்வான்
5) திருப்பணி உ

என்று வாசகம் வெட்டப்பட்டுள்ளது.

எனவே கிடைக்கின்ற சான்றுகளைக் கொண்டு பார்க்கையில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டிலிருந்து இவ்வூர் சிறப்புடன் இருந்து வருவது அறிய முடிகிறது.[3]

எம்பாவை ஸ்ரீரேணுகா தேவி அம்மன் கோயில்

மங்கை மடத்தின் கிழக்கே 1கி.மீட்டரில் உள்ள சிற்றூரே எம்பாவை என்பதாகும். இங்கு அருள்மிகு ரேணுகா தேவி கோயில் உள்ளது. இது ஊர் மக்களின் முக்கிய வழிபடு தெய்வமாகக் கருதப்படுகிறது. இக்கோயில் செங்கற் கோயிலாகும். நாயக்கர் காலம் முதல் இருந்து வரும் கோயிலாகக் கருதலாம். ரேணு என்ற வடமொழிச் சொல்லுக்கு துண்டம் அல்லது துகள் என்று பொருள்.

ஜமதக்னி முனிவரின் கட்டளைப்படி தாயின் தலையை வெட்டிய பரசுராமனின் கதை இங்கு சுவரில் தற்கால ஓவியத்தில் தீட்டப்பட்டுள்ளது. மீண்டும் உயிர் பெறும் போது உடல் மாறிய

தால் அவரை மாரியம்மனாகவும், தன் தாயின் தலையை மட்டும் ரேணுகா பரமேஸ்வரியாகவும் வழிபடுகின்றனர். இக்கோயிலில் காவடி, அமுது படையல், தீ மிதி, சூரசம்காரம் முதலியன 10 நாள் விழாவாக நடைபெறுகிறது. விழாவின் போது மங்கை மடத்திற்கு சுவாமி புறப்பாடு சென்று காட்சி அளித்து வருகிறது.[4]

வீரநரசிம்மப் பெருமாள் கோயில்

மங்கைமடம் கடைத்தெருவில் இருந்து கிழக்கே ½ கி.மீயில் இக்கோயில் கட்டப்பட்டுள்ளது. இக்கோயில் முழுதும் இடிந்த நிலையில் காணப்படுகிறது. எனவே திருப்பணிக்காக சிற்பங்களை தனியே எடுத்து பாலாலயத்தில் வைத்துள்ளனர். பழைய மூலவர் சிற்பமான நரசிம்மர் உருவம் ஒரு தேவகோட்டத்தில் காணப் படுகிறது. கலை அமைப்பை வைத்து இதனை கி.பி. 10-ஆம் நூற்றாண்டாகக் கருத முடிகிறது. திருச்சுற்றின் வடகிழக்கு மூலை யில் உள்ள ஒரு சன்னதியில் திருமங்கை ஆழ்வாரின் சிற்பம் காணப் படுகிறது. இக்கோயில் வரை விரிந்து காணப்பட்ட மங்கை மடம் ஊர் தற்போது பல இடங்களில் அழிந்து வயலாகி விட்டமை உணர முடிகிறது.

பாம்புலி அம்மன் கோயில்

பெருந்தோட்டம் செல்லும் சாலைக்கு பக்கத்தில் இக்கோயில் அமைந்துள்ளது. ஓட்டு கட்டடம். இக்கோயில் 200 ஆண்டு பழமை உடையதாகக் கருதலாம். அம்மன் நான்கு கைகளுடன் அமர்ந்த நிலையில் உள்ளது.

பிடாரி அம்மன் கோயில்

மங்கை மடத்தின் சிற்றூராகிய எம்பாவைக்குச் செல்லும் வழியில் பள்ளிக்கூடத்திற்கு அருகில் இக்கோயில் உள்ளது. நான்கு கைகளுடன் அம்மன் நின்ற நிலை. இது 400 ஆண்டு பழமை உடையதாகக் கருதமுடிகிறது. இக்கோயிலை தற்போது புதுப்பிக் கும் பணி செய்து வருகின்றனர்.

முடிவுரை

சங்ககாலம் முதல் சிறப்புடைத்து நாங்கூர் நாடாகும். நாங்கூர் நாட்டில் அடங்கியது மங்கை மடம், திருவெண்காடு முதலிய ஊர்

களாகும். நாங்கூருக்கும் திருவெண்காட்டுக்கும் இடையில் மங்கை மடம் அமைந்துள்ளது. திருமங்கை ஆழ்வாரின் அவதாரத் தலமான திருக்குரையலூர் மங்கை மடத்தின் அருகில் அமைந்துள்ளது. இதுவல்லாமல் மங்கை மடத்தின் வடக்கில் திருவாலி, திருநகரி முதலிய வைணவத் தலங்களும் மேற்கில் திருநாங்கூர் வைணவத் தலமும் அமைந்துள்ளது. தெற்கில் உள்ள திருவெண்காடு மட்டுமே சிவத்தலம்.

எனவே இங்குள்ள வைணவத் தலங்கள் திருமங்கையாழ்வார் முதலிய வைணவ அடியார்களால் பாடப்பட்டுள்ளன. சீர்காழி, திருவெண்காடு, மணிக்கிராமம் முதலிய சிவத்தலங்களை சம்பந்தர் பாடியுள்ளார்.

ஊரின் பழைமையை நோக்குகையில் இவ்வூரும் சங்ககாலம் முதலே சிறப்படைந்து வந்திருக்க வேண்டும். மங்கை மடத்தின் நான்கு பக்கத்திலும் உள்ள ஊர்களிலிருந்து இங்கு விழாக்காலங்களில் மக்கள் ஒன்றுகூடி நடன மங்கையரின் ஆட்டத்தை கண்டு களித்துள்ளனர். எனவே திருமங்கை ஆழ்வார் காலம், சோழர் காலம், நாயக்கர் காலம்வரை இங்கு மங்கையில் தங்க மடமும் நிலமும், உணவும் அளிக்கப்பட்டு வந்துள்ளதும் ஆகையால் மங்கையர் தங்கிய மடம் "மங்கை மடம்" என்ற பெயர் வரலாற்றில் இன்றும் நின்று நிலவுவதை அறிய முடிகிறது

---

1. திருநாங்கூர் - கா. நெடுஞ்செழியன்
2. கள ஆய்வின் போது திரு. சீ. சம்பந்தம் பூசாரியால் கூறப்பட்ட செய்திகள்
3. கள ஆய்வில் கட்டுரை ஆசிரியரால் கண்டறியப்பட்டது.
4. எம்பாவை கள ஆய்வின் போது திரு. பெருமாள் பூசாரியால் இச்செய்திகள் கூறப்பட்டன.

A RARE SCULPTURE FROM PONNUR

NATANA. KASINATHAN
Director of Archaeology
Government of Tamilnadu

A rare sculpture having the characteristics of Lord Siva Vishnu and Brahma has been found by the Tamilnadu State Department of Archaeology in the year 1989 from a remote village known as Ponnur near Vandavasi in North Arcot Ambedkar District.

Ponnur is one of the important Jain Centres in Tamilnadu. It possesses also Hindu temples being one dedicated to Vishnu and another to Siva. Near the Hindu shrines there are a few mutilated sculptures suggesting the existence of a Vishnu Temple of Pallava period on the basis of the style of the sculptures. Of the broken pieces one, is identifiable as Vishnu. Just adjacent to this heap of sculptures one colossal image is found in standing posture. It is about five to six feet height having four hands, bearing akshamala and axe in the upper hands while the right lower hand is in abhaya, the left lower hand is placed on the thigh as uru hasta. The head is wearing Krita Makuta. The figure is standing on a lotus in sama bhanga style, having the characteristic features of all the three superior deities of Hindu Mythology as the akshamala is representing Brahma, axe is for Siva while the Makuta is for Vishnu. There are two Ganas found flanked on either side of the deity, emerging from the stalk of the lotus.

This type of figure has so far not been spotted either in Tamilnadu or in any other parts of India. But very close to this is found illustrated in T A. Gopinatha Rao's

Elements of Hindu Iconography Volume I, Part I, (Plate LXXII Figure 2). This illustration is reported to have been found from Ajmere and identified as Dattatreya. The description of Ajmere figure is as follows: "The image is a standing one. It carries in its hands the Sula, the Chakra, the Kamandala and perhaps the akshamala. It may be noticed that the Padma, the Garuda and the bull, the characteristic emblems of Brahma, Vishnu, Siva respectively are carved on the pedestal. On either side stand a few figures which appear to be some devotees".

Dattatreya is said to be one of the minor avataras of Vishnu. The story of Dattatreya detailed in Markandeya Purana is as follows:

"There was a certain Brahmana, a Kausika in the city of Pratishtana who was suffering from leprosy His wife served him nevertheless as if he was a deity. Once it so happened that the sage Animandavya became annoyed with this leprous Kausika and uttered a curse that he should die before the next sunrise. Thereupon the chaste, faithful and devoted wife, relying upon the power of her chastity, ordered the sun not to rise; and for days the sun did not rise. The Gods became frightened at this and approached Anasuya, the famous wife of Atri, and requested her to pacify the wife of the leprous Kausika and make the sun rise from day to day as usual. She agreed to do as desired, and went to the Kausika's house. There she was received by his wife with all the due rites of hospitality and was asked the purpose of her most welcome visit. On being told that the object of her visit was to allow the sun to rise as before from day to day, she said that he would gladly do so, provided that thereby the threatened death does not befall her lord and master. On being assured of this she allowed the sun to rise; and he rose. Her husband, however, fell down as if dead, but was immediately

revived by Anasuya and made Healthy, strong, beautiful. The Gods became pleased at this and asked the worthy and honourable wife of the revived and rejuvinated Kausika to receive a boon at their hands to which she readily agreed. And the boon she wanted was Brahma, Vishnu and Siva, the Gods of the Hindu Trinity should be born as her sons. They were so born; and Dattatreya was the incarnation of Vishnu".

In Tattatreya Thattuvam (Tattatreya Philosophy) a different version is found about the birth and life of Dattatreya. In this work, Dattatreya is said to be the son of sage Atri and Anasuya. The story of his birth is narrated as given below;

'At the instigation of Naradha the three devine Lakshmi, Parvati and Saraswathi had sent their spouses to test the chastity of Anasuya. They came to Anasuya in disguise and begged before her. She had immediately agreed to offer food. But these three superior Gods requested her to distribute the offerings in nackedness. For this unusual request also she agreed.

Due to her chastity she made these three Gods into children and fed them in nudity. Having understood the greatness of Anasuya, the three Goddesses appeared before her and appreciated her chastity. Then Anasuya made those three children again into their original forms.

Having enjoyed the super power of Anasuya, the three Gods offered a male child which possesses the nature of three Gods, to the devoted couple Atri and Anasuya. This child was Dattatreya.'

The figure of Dattatreya found from Ponnur can be dated to early Seventh century A.D. Comparing to all the illustrations found in the Elements of Iconography the

image under discussion appears to be the earlier one. During Seventh century, the religious feud was in high pitch as far as Tamilnadu is concerned even among Saivites and Vaishnavites. Hence the religious leaders of that age should have tried to pacify the followers of different faith by illustrating the trinity in one image and explained to them that the eternal bliss is one that could be attained through different margas or path ways. Hence the form of Dattatreya.

ANCIENT ROCK PAINTINGS AT THIRUMALAI*

S. KANNAN, M A.,
(Former Student of Archaeology, Madras University)

Thirumalai is a Small hamlet situated about 21 Kms. west of Sivaganga, the headquarter of Pasumpon Muthuramalingam District A granite hill is located at the north of the hamlet. The head and tail of the hill are oriented in the east - west direction. Perhaps, due to the inadequate transportation and the remote location from the main roads it had failed to draw the attention of the researchers

Ancient rock paintings which are rare in Tamilnadu serve as one of the earliest evidences of Tamilian art A systematic hunt for ancient rock and cave paintings in Tamilnadu may throw fresh light for knowing ancient civilization of Tamils. A few rock paintings were already discovered in different places like Kilvalai, Settavarai, Padiyendal, Alampadi, Kollur and Udayanattam (South Arcot District),[1] Sennarayanpalli (North Arcot District), Mallappadi, Maharajakkadai and Mallasamudram (Dharmapuri District), Vettaikaranmalai (Coimbatore District) Konavakkarai and Sikur (Nilagiri) Cirumalai (Anna District) Muthupatti, Anaipatti and Kamayakavundanpatti (Madurai District). Now Thirumalai also joins the list of ancient rock paintings of Tamilnadu. Thirumalai secures the credit of having more number of rock paintings at par with the places mentioned above.

Thirumalai rock paintings are drawn in red ochre. Rich lateritic deposit available in the neighbourhoods of Thirumalai served as the chief raw material for drawing

the painting. Lateritic stones would have been pulverized and mixed with water or with vegetable juice or with animal fat or with urine before being applied to the rock surface. It is also likely that some binding material was used, though traces of any organic glue or resin have been lost. The oxide applied to the shelter walls seems to have been reacted chemically with the mineral content of the rock causing the colour to penetrate Thus, the picture remained visible even after the original pigment had been eroded by the natural forces.

These paintings might have been drawn with finger or brush prepared in plant stem. In some cases paintings seen in great height must have been drawn with the help of a long stick. Since the painter could not have control over the movement of longstick he used, the out-line of such paintings are found irregular.

The painter seems to have adopted two methods while drawing the figures at Thirumalai. In the first method only the out-line of the figures is drawn and in the second method the entire figure is painted nicely.

At Thirumalai ancient rock paintings are seen in four places which had once served as shelters for the inhabitants. At the foot-hill a lonely painting is found on the western wall of the rock shelter which is located between "Sarukkum Parai" and the rock west to it. In this painting a man appears to be seated on an animal. The out-line of the animal is not well depicted The head of the man is small and elliptical with an elongated dot in the middle representing the eye. A slender line connects the head with the shoulder. Ths body of the figure is drawn like upright drum. The oblique lines drawn on the body of the figure suggest that it is clothed. The figure is shown only with three fingers in its hands. The hair is painted with care.

At the hill-top another painting is seen on the north rock face of the shelter located east of "Pamparamalai." In this painting two men are depicted facing each other. Here the head is represented by horizontal line. The structure of the body remains the same as the previous painting.

A group of paintings is drawn on the wall of the rock shelter located on the south-eastern side of "Pamparamalai". On the right two men are seen holding their hands together. Just below this, a tall figure is also seen, very near a deer, stretching out its hands as if it tries to trap the deer. Since the paint in the head of the deer had eroded, the head and horn are visible here and there. The two men seen at the distance also appear to help the tall man in the trapping. Below this, three men are depicted holding their hands together as if they encircled to trap a small deer. Here the deer is fully visible and beautifully painted. Traces of figures are seen on either side of the three men and below the deer. But they are not clearly visible and are washed away by natural forces. On the left two fascinating figures in life size are painted beautifully. The figure on the left is taller than the one at the right. It is also sturdy. The right arm of the figure is folded and held upright while the left is stretched straight. Both the foot and the hand have five fingers each. Head is drawn nicely. The neck is broader and well marked. Protuberance on thehead snggest kont of hair and thereby suggesting the figureas female. The figure found on the right has a slim body. The right arm of the figure is stretched straight and fingers are not seen in it. The left arm is bent and partially vanished. Left leg of the figure is completely invisible while the right remains intact. Both the figures have dishevelled hair. Traces of smaller figures are also seen around the main figures. If we analyse the theme of this painting it may give rise to various interpretations. It makes us to presume that the painting has some religious or social significance.

The rock shelter located on the Southern side of "Pampa. ramalai" has good number of paintings. The paintings are seen scattered all over the wall. Individual figures are drawn on the right. On the left a small figure sitting on an animal is drawn.

Dating the ancient rock paintings is more problematic and subjected to lot of controversies. So far dating has been made based on the style and structure of the paintings Pavun. Durai has classified the ancient rock paintings into three groups in his book "தமிழகப் பாறை ஓவியங்கள்".

1. Ancient paintings representing wild animals in the dark caves which are datable to 30,000 B.C. Such paintings are found only in Europe and not in India.

2. The representation of wild animals is less compared to the animals which can be hunted easily like deer and goat. Paintings of this group are found in abundance in Tamilnadu and are datable to 3,000 B.C.

3. Paintings of ancient man in which human figures appear frequently, animals are depicted in hunting, sceens of combating is also present Apart from this man sitting on animals, depiction of horse, social dance and rituals are also drawn. This group of paintings is dated around 2000 B C. Megalithic or Early Historic period.

Ancient rock paintings at Thirumalai can be dated to Early historic period based on the following reasons.

1. Human figures appear more frequently as appeared in other early historic paintings.

2. Men sitting on animals have been painted at a time when the domestication of animals had already been

carried out. Therefore we can consider these paintings as Early Historic Paintings.

3. Geometric structure of the figures appear only in the Early Historic rock paintings.

4. Weapons are not found in the hands of human figures (depicted at Thirumalai) even they encircled to trap the animals.

5. The life size figures found at Thirumalai has some socio-religious significance, which had started and established well in the Early historic period.

---

* The ancient rock paintings at Thirumalai were earlier noticed and reported by Mr. A. V. Jeyachandran and the Staffs of the State Department of Archaeology, Thirumalai Nayakar Mahal Madurai, R.D.M. College, Sivaganga magazine (1972) and Tamilarasu (1990) respectively.

1. Dr. Avvai Natarajan & Natana. Kasinathan, Art Panorama of Tamils pp. 29-34, published by State Department of Archaeology.

அழகன்குளமும் அயல் நாட்டுறவும்

திரு. அ. அப்துல்மஜீத்
தொல்லியல் துணைக் கண்காணிப்பாளர்

அழகன்குளம் இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமநாதபுரம் வட்டத்தில் வைகை ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ள ஓர் ஊர். வைகை ஆறு வங்கக் கடலுடன் கலக்கும் ஆற்றங்கரை என்னும் ஊரிலிருந்து 3 கி. மீ. தொலைவில் உள்ளது.

இவ்வூரின் வரலாற்றைப் பற்றிய நேரடியான இலக்கியச் சான்றுகளோ கல்வெட்டுச் சான்றுகளோ கிடைக்கவில்லை. ஆயினும் இவ்வூரின் வரலாற்றை அறியத் தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத்துறை 1987 மற்றும் 1991-ஆம் ஆண்டுகளில் அங்கு நடத்திய அகழாய்வுகளில் கிடைத்த தொல்பொருட்கள் மிகவும் துணை புரிகின்றன.

இந்த அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ள தொல்பொருட்களைக் கொண்டும் அவை கிடைத்துள்ள மண் அடுக்குகளைக் கொண்டும் இவ்வூரின் வரலாறு கி.மு 4-ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 5-ஆம் நூற்றாண்டு வரை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. சங்க இலக்கிய மாகிய அகநானூறு, ஊனூர் மதில் சூழ்ந்து விளங்கியது எனவும் அதனைப் பேரர் வீரர்கள் பாதுகாத்து வந்தனர் என்றும் குறிப்பிடு கிறது. இவ்வூரின் அருகே மருங்கூர்ப்பட்டினம்[1] இருந்தது. அப்பட்டினம் அழகாகவும் செல்வச் செழிப்புடனும் விளங்கியது என்றும் இருமருங்கிலும் உப்பங்கழிகள் இருந்தன என்றும் குறிப் பிடுகிறது. இவ்வூனூரையும் மருங்கூர்ப் பட்டினத்தையும் தழும்பன் என்ற ஒரு குறுநிலத்தலைவன் ஆண்டு வந்தான். அவனைப் பாண்டிய மன்னன் வெற்றி கொண்டான் என அகநானூறு கூறுகிறது.

அகநானூற்றில் குறிப்பிடப்படும் மருங்கூர்ப் பட்டினத்தின் அமைவிடமும் அழகன்குளத்தின் அமைவிடமும் சற்றேறக்குறைய பொருந்தி வருகிறது மேலும் இப்பட்டினம் பாண்டிய நாட்டில்

இருந்தமை குறிப்பிடத்தக்கது. அழகன்குளத்தில் அகழ்தெடுக்கப் பட்ட தொல்பொருட்கள் மேலை நாடுகளுடன் கொண்ட வணிக உறவைப் புலப்படுத்துவனவாக உள்ளன. மேலும் இவ்வூர் பாண்டிய நாட்டுக் கடற்கரையில் அமைந்துள்ளமையால் மேலை நாடுகளுடன் வணிக உறவு கொள்ள ஏதுவாக அமைந்து இருந்தமை புலப்படு கிறது பாண்டிய நாட்டிற்கும் ரோம் நாட்டிற்கும் இருந்த உறவை யும் தொடர்பையும் சங்க இலக்கியங்கள் வாயிலாக அறிகிறோம். பாண்டியர்களுடைய படைகளில் ரோமானியப் போர் வீரர்கள் பணியாற்றியமைக்கான குறிப்புகள் காணப்படுகின்றன. பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனின் கோட்டை வாயிலில் ரோமானியப் போர் வீரர்கள் காவல் காத்து வந்தனர்.[2] ரோம் நாட்டிலிருந்து தமிழ் நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட இனிமையான மதுவைப் பாண்டிய மன்னர்கள் அருந்தினர் எனப் புறநானூறு கூறுகிறது.[3] அழகன்குளத்திற்கு வடமேற்கே 15 கி.மீ. தொலைவில் தேவிப் பட்டினம் என்னும் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஊர் உள்ளது. இவ்வூரை கி.பி. 13 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த ஜடாவர்மன் சுந்தரபாண்டியன்[3] கல்வெட்டும் கி.பி. 14 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த ஜடாவர்மன் விக்கிரம பாண்டியன்[5] கல்வெட்டும் முறையே இளங்கோ மங்கலமாகிய உலக மாதேவிப்பட்டினம் என்றும் புறக்குடி ஆகிய ஸ்ரீவல்லபப்பட்டினம் என்றும் குறிப்பிடுகின்றன. கி.பி 1533 ஆம் ஆண்டைச் சார்ந்த கல்வெட்டு தேவிப்பட்டினத்தை தேவிப்பட்டினம் என்றே குறிப்பிடுகின்றது.[6] இம்மூன்று கல்வெட்டு களும் தேவிப்பட்டினம் செவ்விருக்கை நாட்டில் இருந்ததாகக் குறிப்பிடுகின்றன. அழகன்குளம் தேவிப்பட்டினம் அருகே அமைந்துள்ளமையால் இவ்வூரும் கி.பி. 13 ஆம் நூற்றாண்டிலிருந்து பாண்டிய நாட்டில் செவ்விருக்கை நாடு என்ற பகுதியின் கீழ் இருந்து வந்ததாகக் கொள்ளலாம்.

அகழாய்வு மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ள தொல்பொருட் களைக் கொண்டு இவ்வூரின் வரலாற்றை இரண்டு காலகட்டங் களாகப் பிரிக்கலாம். முதற் கால கட்டத்தில் கிடைக்கப் பெற்றுள்ள கருப்பு, சிவப்பு நிறப் பானை ஓடுகள், மௌரியப் பானை ஓடுகள், ரௌலட்டெட் மட்பாண்ட ஓடுகள், சாம்பல் நிறப் பானை ஓடுகள், சொர சொரப்பான சிவப்பு நிறப் பானை ஓடுகள், தமிழி எழுத்துக் கள் பொறித்த பானை ஓடுகள் முதலியவைகளைக் கொண்டு அழகன் குளத்தின் முதற் கால கட்டம் கி.மு. நான்காம் நூற்றாண்டிலிருந்து

கி மு. முதல் நூற்றாண்டு வரை என வரையறை செய்யலாம். மேலும் இங்கு கிடைத்த கரித்துண்டுகளை சி-14 (கார்பன்-14) என்னும் அறிவியல் முறையில் ஆய்வு செய்த போது இக்கரித்துண்டு கள் முதற் கால கட்டத்தையே சேர்ந்ததெனத் தெரிய வந்துள்ளது இக்கால வரையறையை நிர்ணயிக்க இக்காலகட்டத்தில் அழகன் குளத்தில் வாழ்ந்த மக்கள் பயன்படுத்திய கீறல் இடப்பட்ட பானை ஓடுகளும், உலோகத்தினாலான எடைக்கல்லும், செப்புக்காசு ஒன்றும் (இனம் காண முடியாதது) சதுர வடிவமுள்ள செப்புக்காசு ஒன்றும் (பாண்டியர் காலக் காசாக இருக்கலாம்) மேலும் துணை புரிகின்றன.

மேலும் இக்கால கட்டத்தைச் சார்ந்த வழவழப்பான மணிகளும், சிவப்பு நீலநிறக் கண்ணாடி மணிகளும் பவள மணிகளும், கண்டெடுக்கப்பட்டுள்ளன. அங்கு வாழ்ந்த மக்கள் பயன்படுத்திய சங்கு வளையல்களின் துண்டுகளும், வளையல்கள் செய்யப் பயன் படுத்தப்பட்ட அறுத்த சங்குகளும், இரும்புக் கனிமங்களும், இரும்பி னாலான ஆணிகளும் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் காலகட்டத்தில் கருப்பு சிவப்புப் பானை ஓடுகளும், ரோமானிய மதுக்குடுவைகளின் பகுதிகளும், ரௌலட்டெட் இனப் பானை ஓடுகளும், சாம்பல் நிறப்பானை ஓடுகளும், அழகன்குளம் பானை ஓடுகளும், சொரசொரப்பான சிவப்பு நிறப் பானை ஓடுகளும், தமிழி எழுத்துக்கள் பொறித்த பானை ஓடுகளும், கண்டு பிடித்ததன் அடிபபடையில் இவ்விரண்டாம் காலகட்டத்தினை கி மு முதலாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு வரை என வரையறை செய்யலாம்.

இக்கால கட்டத்தினைச் சேர்ந்த ரோமானிய மன்னர்களாகிய இரண்டாம் வாலண்டைன் (கி பி. 383 - 395) அர்கேடியஸ் (கி. பி. 395 - 408) மற்றும் தியோடோசியஸ் (கி. பி. 383 - 393) ஆகிய மன்னர்களுடைய செப்புக்காசுகள் இங்கு கிடைத்துள்ளன.

அழகன்குளத்தில் மேற்கொண்ட மேற்பரப்பாய்வின்போது சில சங்குகளின் பகுதிகள் கண்டெடுக்கப்பட்டன. அவற்றுள் ஒன்றில் 'தீக்' என்று அரபு மொழியில் அரபு எழுத்தால் எழுதப்பட்டுள்ளது. 'தீக்' என்ற சொல் சேவல் என்ற பொருளைத் தரும். இங்கு

நடத்தப்பெற்ற அகழாய்வுகளில் கிடைத்த மேற்குறிப்பிட்டுள்ள தொல்பொருட்களும், இங்கு நடத்தப்பெற்ற மேற்பரப்பு ஆய்வில் கிடைத்த தொல்பொருட்களைக் கொண்டும் அழகன்குளம் அயல் நாடுகளுடன் கொண்டிருந்த உறவினையும் நம் நாட்டின் டைபகுதியுடன் கொண்டிருந்த உறவினையும் பற்றி அறிந்து கொள்வதற்கு ஏதுவாக அமைகின்றன. அழகன்குளம் வங்கக் கடற்கரையின் அருகே அமைந்துள்ளமையாலும், ரோமானிய மதுக்குடங்களின் பகுதிகளும், ரோமானிய மன்னர்களின் காசுகளும், அழகன்குளம் அகழாய்வில் கிடைத்துள்ளதாலும், இவ்வூர் ரோமானிய நாட்டோடு உறவு கொண்டு இருந்தது தெளிவாகிறது. இவ்வுறவு வணிகத்தின் மூலமே நடைபெற்றிருத்தல் வேண்டும். அதற்குரிய சான்றுகள் சங்க இலக்கியங்களில் காணப்படுவதை முன்னர் குறிப்பிட்டுள்ளோம். சங்க இலக்கியங்களின் கூற்றை மெய்ப்பிக்கும் வண்ணம் இத்தொல் பொருட் சான்றுகள் அமைந்துள்ளன.

மேலும் இவ்வூர், கடற்கரையின் ஓரத்தில் அமைந்துள்ளமையால் ஒரு துறைமுகப் பட்டினமாக இருந்திருக்க வேண்டும். துறைமுகப்பட்டினமாக விளங்கியதால் பல நாடுகளுடன் வணிகத் தொடர்பு கொள்ள ஏதுவாக அமைந்திருந்தது. ரோமானிய வணிகர்கள் இப்பகுதிக்கு வரவும் இங்குள்ள மக்கள் ரோம் நாட்டுக்குச் செல்லவும் வணிகம் துணை புரிந்து இருக்கிறது. ரோம் நாட்டில் "ரௌலட்டெட்" வகை மண் தட்டுகள் பயன்படுத்தப் பட்டன. அத்தட்டுகளைப் போன்று ரோம் நாட்டுடன் வணிக உறவினால் அழகன்குளத்திலும் இவ்வகைத் தட்டுகள் செய்யப் பட்டுள்ளன. இத்தட்டுகள் ரோமானியத் தட்டுகளைப் போன்ற சாயலினைக் கொண்டு விளங்குகின்றன. இத்தட்டுகளில் தமிழி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன ஒரு தட்டில் இப்பொறிப்பு சூளையில் இடுவதற்கு முன்பே தமிழி எழுத்தில் பொறிக்கப் பட்டுள்ளதால் இது நம் நாட்டைச் சேர்ந்தது என்பது உறுதியாகிறது. வணிக உறவின் வாயிலாகவும், ரோமானிய மக்களின் வருகையினாலும் இத்தட்டு செய்யும் முறை நம் நாட்டில் வழக்கத்திற்கு வந்திருக்கலாம். இக்கண்டுபிடிப்புகள் அழகன் குளத்தின் ரோமானிய உறவை மெய்ப்பிக்கின்றன இங்கு அரபி எழுத்துக்கள் பொறித்த சங்கின் பகுதி ஒன்று மேற்பரப்பாய்வில் கண்டெடுக்கப் பட்டுள்ளதால், அரேபியாவுடன் பண்பாட்டுத் தொடர்போ வணிகத் தொடர்போ கொண்டுள்ள மக்கள் இவ்விடத்தில் வாழ்ந்ததற்கான

சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன வணிகத்தின் மூலம் இத்தொடர்பு ஏற்படுவதில் வியப்பொன்றும் இல்லை. அழகன்குளம் அரேபியாவுடனும் தொடர்பு கொண்டிருந்தது என்று கருதலாம்.

இதுமட்டுமன்றி மௌரியர் பானை ஓடுகள் (Northern Black Polished Ware) அழகன்குளத்தில் கிடைக்கப் பெற்றுள்ளமையால் தமிழ்நாட்டு மக்கள் கங்கைச்சமவெளி மக்களுடன் பண்பாட்டுத் தொடர்பும் வணிகத் தொடர்பும் கொண்டிருந்தமையும் அறியலாம். இது போன்ற மௌரியப் பானை ஓடுகள் பாண்டிய மன்னர்களின் தலைநகரமாகவும் துறைமுகமாகவும் விளங்கிய கொற்கையில் கண்டு பிடிக்கப்பட்டமையால் அயல்நாட்டு மற்றும் உள்நாட்டு உறவும் நிலவி இருந்தமையை அறிய முடிகிறது.

இலக்கியங்களும், கல்வெட்டுகளும் நேரிடையாக அழகன்குளத்தைப் பற்றிக் குறிப்பிடவில்லையாயினும் இங்கு நடத்தப்பெற்ற அகழாய்வின் மூலம் கிடைத்த தொல்பொருட்களைக் கொண்டு இவ்வூரின் வரலாற்றையும், அயல்நாட்டு உறவினையும் அறிந்து கொள்ள முடிகிறது.

---

1. கடிமதில் வரைப்பின் ஊனூர் உம்பர்
   விழுநிதி துங்கம் வீறு பெறு திருநகர்
   இருங்கழிப் படப்பை மருங்கூர்ப்பட்டினம் (அகம்-227 : 18-20)
   முழங்கு கடல் ஓதும் காலைச் சொட்கும்
   பழம்பல் நெல்லின் ஊனூர் (அகத் – 220)
2. கடிமதில் வாயில் காவலிற் சிறந்த அடல்வாள் யவனர் (சிலம்பு 66 67)
3. ஒண்டொடி மகளிர் பொலங்கலத்தேந்திய
   தண்கமழ் தேறல் மடுப்ப மகிழ் சிறந்து
   ஆங்கினி தொழுகுமதிபொரும! (புறம் 24 : 31–33)
4. தெ. இ. க. தொகுதி 8. எண். 404
5. மேலது எண். 405
6. மேலது எண். 405-08

மங்களேசுவரி நாச்சியாரும் மகரதோரணமும்

ஆர். வசந்தகல்யாணி
தேர்வுநிலைக் கல்வெட்டாய்வாளர், சென்னை

தமிழகத்தில் விஜயநகரர், நாயக்கர் ஆட்சிகுப் பின் தனியாட்சி செலுத்திய சிறந்ததொரு மறவர்குல மன்னர்களே இராமநாதபுரம் சேதுபதிகள். கிழவன் சேதுபதி தொடங்கி அவர்களது தனியாட்சி சீரிய முறையில் அமைந்திருந்தது சேதுபதிகள் இறை நெறியில் சென்று மக்களுக்கும் பகேசனுக்கும் தொண்டு செய்தனர். மறவர் சீமையை ஆளும் மன்னர்களாக மட்டுமன்றி இராமேசுவரம் கோயிலின் காவலர்களாகவும் கருதி வாழ்ந்தனர். இதன் காரணமாகவே சேதுபதி மன்னர்கள் சேதுகாவலர், சேதுமூலதுரந்தரன், சேதுரக்ஷகன், சேதுங்கராயன் என்று போற்றப்பட்டனர். தம் செல்வத்தின பெரும பகுதியைக் கோயிற் பணிகளுககே வாரி வழங்கினர் ஏராளமான கல்வெட்டு, செப்பேட்டுச் சான்றுகள் இதனை உறுதிசெய்கின்றன.

சேதுபதி மன்னர்கள் ஆற்றிய தொண்டுகள் அவர்களது கடைசிக் காலம் வரை இடையறாது நடைபெற்றன. மன்னர் தம் கரங்கள் மட்டுமன்றி அரசகுலப் பெண்களின் கரங்களும் சமயப் பணிக்கெனக் கொடை வழங்கியுள்ளன.

இது தமிழ் மண்ணிற்குப் புதுமையானதொன்றில்லை. அரசமாதேவியரும் அரசகுலப் பெண்களும் கோயில்களுக்கும் அக்கோயில் உறை தெய்வங்களுக்கும் ஆபரணங்கள், பாத்திரங்கள், பரிகலன்கள் சோடச உபசாரப் பொருட்கள் போன்றவற்றைக் கொடையாக அளித்ததோடு, உலாவரும் உற்சவமூர்த்திகளாம் செப்புத் திருமேனிகளையும், அவற்றுக்கான நிலந்தங்களையும் அளித்து அருப்பணியாற்றியுள்ளனர் சான்றாகப் பல்லவ மன்னன் இராஜசிம்மனது தேவி ரங்கபதாகை, சோழ மன்னன் கண்டராதித்தன் தேவி

செம்பியன் மாதேவி, இராஜராஜனின் தமக்கை குந்தவைப் பிராட்டியார், இராஜேந்திரனின் மனைவி பஞ்சவன் மாதேவி, விஜயநகர மன்னன் கிருஷ்ணதேவராயரின் மனைவி நாகலாதேவி, திருமலை நாயக்கரின் மனைவியர் தோளியம்மை, ருத்ராதேவி என அரச குலப் பெண்களும் வரலாற்றுப் பாதையில் தம் சுவடுகளைப் பதித்துச் சென்றுள்ளனர். அவ்வழியில் மறக்குல மன்னர் சேதுபதி வம்சத்தில் மங்களேசுவரி நாச்சியாரும் குறிப்பிடத்தக்க சிறப்பினைப் பெறுகிறார்.

முத்து விஜய ரகுநாத சேதுபதி

சேதுபதி மன்னர்களின் பட்டியலில் இறுதியாகக் காணப்படுகின்ற பெயர் முத்துராமலிங்க சேதுபதி எனகிற முத்துவிஜய ரகுநாத சேதுபதி [கி. பி. 1761–1809]. இவர் மிகச் சிறு குழந்தையாயிருந்த போதே மன்னர் பதவியை அடைந்தவர். இவர் தம் பதினோராவது வயதில் அதாவது கி.பி. 1772ல் இவருடைய தாய், தமக்கையரோடு திருச்சிக் கோட்டையில் அடைக்கப்பட்டார். மக்களின் கிளர்ச்சி மற்றும் அரசியல் குழப்பத்தின் காரணமாக கி.பி. 1781-ல் சிறையினின்று விடுவிக்கப்பட்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார் இம்மன்னரது சிறந்த நிர்வாகத் திறன் கண்டு மனம் பொறாத கும்பினியார் கி.பி. 1795ல் திடீரென இராமநாதபுரம் அரண்மனையைக் கைப்பற்றி இந்த மன்னரை மீண்டும் திருச்சிராப்பள்ளிச் சிறையிலடைத்தனர். இதனைத் தொடர்ந்து மக்கள் கிளர்ச்சி மீண்டும் தலைதூக்கியது. இந்தக் கிளர்ச்சிக்குச் சிறைப்பட்ட சேதுபதி மன்னர் தான் காரணமென்று முடிவு செய்து அவரைத் திருச்சியிலிருந்து சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் சிறை வைத்தனர்.[1]

மங்களேசுவரி நாச்சியார்

எட்டு ஆண்டுகள் இராமநாதபுரம் சீமையைக் கும்பினியார் தமது நேரடி ஆட்சியில் வைத்திருந்து விட்டு, கி.பி. 1803ல் முத்து விஜய ரகுநாத சேதுபதியின் தமக்கையார் மங்களேசுவரி நாச்சியாரை மறவர் சீமையின் ராணியாக நியமித்தனர்.

முத்துவிஜய ரகுநாத சேதுபதியும் மங்களேசுவரி நாச்சியாரும்

சேதுபதி வம்சத்தின் இறுதிமன்னர் முத்துவிஜய ரகுநாத சேதுபதி தம் இறுதிச் செப்பேட்டில் இத் தமக்கையார் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.[2] சென்னைக் கோட்டையில் தனது இரண்டாவது மனைவி வீரலட்சுமியுடன் சிறையிலிருந்த மன்னர் தன் இறுதிக் காலத்தின் நெருக்கத்தை உணர்ந்தார்; எனவே தனது மனைவி கருவடைந்திருப்பதை மனதில் கொண்டு பரிந்துரை ஒன்றை எழுதிக் கையொப்பமிட்டார். அதில் தனது மனைவி வீரலட்சுமி குழந்தை பிறந்தவுடன் இராமநாதபுரம் ஜமீனுக்குக் கொண்டு போய் அக்குழந்தையைத் தமக்கை மங்களேசுவரி நாச்சியாரிடம் ஒப்புவித்து அரசு பென்ஷனும் ஜமீனில அலவன்சும் சந்ததி பரம்பரையாகக கொடுத்துப் பாதுகாக்க வேண்டுமென்று எழுதிக் கையொப்ப மிட்டுள்ளார். அவரது தமக்கையின் மீதிருந்த மிகுந்த நம்பிக்கையை இது புலப்படுத்துகிறது. இத்தமக்கையார்தான் கி.பி. 1803-ல் மங்களேசுவரி நாச்சியார் என்ற பெயரில் மறவர் சீமையின் ஜமீன் தாரிணியாக ஆட்சிப் பொறுப்பேற்றவர். சிறை சென்ற அனுபவமும் ஆங்கிலேய ஆதிக்கத்தின் மேலாண்மையை உணர்ந்த அனுபவமும் பெற்றவர். முத்துவிஜய ரகுநாத தேவர் காலம் முதல் சேது மண்ணில் ஆங்கிலேயரின் தலையீடு மிகுந்தது. அவரைத் தங்களுக்கு எதிரானவர் என்று கருதிப் பதவியிலிருந்து நீக்கி விடுமளவுக்கு ஆங்கிலேயரின் ஆதிக்கம் வலுப் பெற்று வந்த காலகட்டம் அது. அந்தச் சூழ்நிலையில் தான் மங்களேசுவரி நாச்சியார் இராமநாதபுரம் கோட்டையிலிருந்து மக்களுக்கும் மகேசனுக்கும் தொண்டாற்றி யுள்ளார் என்பது நோக்கத்தக்கது.

ராணி மங்களேசுவரி நாச்சியாரும் மகரதோரண விளக்கும்

மங்களேசுவரி நாச்சியார் இராமநாதபுரம் கோட்டைக்குள் அமைந்திருக்கும் மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் இறைவன், இறைவி சன்னிதிகளுக்கு மகரதோரண விளக்குகளைச் செய்தளித் துள்ளார் இம்மகரதோரண விளக்குகள் சென்னையில் இருப்பது அண்மையில் கண்டறியப்பட்டது [3]

மகரதோரண விளக்குகள்

இவை சென்னை நுங்கம்பாக்கம் ஹாடோஸ் சாலையில் உள்ள கோ. சு. முரளி அவர்களின் சேகரிப்பில் உள்ளது 180 ஆண்டு

களுக்கு முற்பட்ட இத்தோரண விளக்குகள் கலைச்சிறப்பு மிக்கவை. இதுகாறும் தமிழகத்தில் கிடைத்துள்ள மகரதோரண விளக்குகளில் அளவிலும், உருவிலும் பெரியவை.

முதல் மகரதோரண விளக்கு

இத்தோரண விளக்கில் 175 தீபங்கள் ஏற்றும் வகையில் நீப அகல்கள் தோரணத்தைச் சுற்றி அலங்கரிக்கின்றன. தோரணத்தி லுள்ள வாசகங்களில் 175 தீபங்களும் அலற்றின் எடையும் குறிப் பிடப்பட்டுள்ளது.

தோரணத்தின் கீழ்ப்புறம் இருமருங்கும் இரு உலோகத் தூண்கள் அமைந்துள்ளன. அவற்றின் முன்புறம் இரு துதியாளிகள் முன் கால்களை மேலே தூக்கிப் பாயும் நிலையில் பக்கவாட்டில் பாங்குறக் காட்டப்பட்டுள்ளன. துதியாளியோடு காட்டப்பட்டுள்ள உலோகத் தூண்கள் பாதம், இடை, கலசம், தாடி, குடம், பத்மம் பலகை, நாணுதல், பூமுனை ஆகிய உறுப்புகளைக் கொண்டு விளங்குகின்றன.

இவற்றின் போதிகை மீது அமர்ந்த நிலையில் இரு பக்கங் களிலும் இரு சீறும் சிம்மங்கள் காட்டப்பட்டுள்ளன. இச்சிம்மங் களின் தலைமீது நாடகச் சட்டமும், பக்கவாட்டில் வனப்போடு வளைந்து நிற்கும் பூமுனை, வளைந்த வாழைத் தாரையொத்தும் வனப்பூட்டுகின்றன. நாடகச் சட்டத்தின் மேல் இரு பக்கங்களிலும் இரு மகர மீன்கள் காட்டப்பட்டுள்ளன. இவை மீனுடலும் பறவை வாலும் கொண்டவை. இவற்றின் வாயிலிருந்து வெளிப் படும் தோரணம் அரைவட்ட வடிவில் அழகுற அமைக்கப் பட்டுள்ளன. திருவாசியின் இடைப்பகுதியில் வரிவரியாக விளக்கு கள் பொருத்தப்பட்டுள்ளன. இம்மகரதோரணம் ஓரே வார்ப்பின்றி ஒன்பது துண்டுகளாக வார்க்கப்பட்டுப் பொருத்தப்பட்டுள்ளது. இது பித்தளைக் கலவையால் ஆனது 268 செ. மீ. உயரமும் 208 செ மீ. அகலமும் உடையது. இவ்விளக்கின் இடப்புறத் தூணின் மேற்சட்டத்தில் இதனைக் கொடையளித்தவர் பெயர், விளக்குகளின் எண்ணிக்கை, எடை ஆகியன 7 வரிகளில் பொறிக்கப் பட்டுள்ளன இவ்வாசகங்கள் இதனை மகரதோரண விளக்கு என்று குறிக்கக் காண்கிறோம். பொதுவாக இவை வாயிற் தோரண விளக்கு, திருமாலை விளக்கு என்றும் அழைக்கப்படுகின்றது

இரண்டாம் மகரதோரண விளக்கு

இது முதல் மகர தோரண விளக்கைப் போன்றே அமைந்துள்ளது. ஆயின் அகல் விளக்கின் எண்ணிக்கையில் மாறுபட்டுள்ளது. முதல் மகர தோரணம் நீளவாட்டில் அமைய, இரண்டாவது தோரணம் அகலவாட்டில் அமைந்துள்ளது இம்மகர தோரணத்தின் மேற்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள அகல் விளக்குகள் பெரும்பாலும் உடைந்துள்ளன. இது 275 செ மீ. உயரமும் 215 செ.மீ. அகலமும் உடையது. இம்மகர தோரணத்திலும் இவ்வரசியார் அளித்தது பற்றிய வாசகம் உள்ளது. [மகர தோரண விளக்குகளில் உள்ள வாசகங்கள் பின்னே இணைக்கப்பட்டுள்ளன.]

தமிழகத்தில் மகர தோரணங்கள்

தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் இறைவன், இறைவி சந்நிதிகள் முன்பும், பரிவார தெய்வங்களின் முன்பும் மகரதோரண விளக்குகளை அமைக்கும் வழக்கம் பலகாலமாக இருந்து வந்துள்ளது. மகாதோரணம் என்றும் மகரதோரணம் என்றும் வழங்கப்பட்டது. இதனை, அழகிய வேலைப்பாடமைந்த வாயில் வளைவு என்றும் கூறலாம். மகரம் என்ற ஒருவகை மீனின் உருவங்களுடன் அழகுற அமைக்கப்பட்டதால் மகரதோரணம் என்றும் வழங்கப்பட்டிருக்கலாம். அரச விருதுச் சின்னமாகவும் இது விளங்கியுள்ளது. கோட்டை வாசல்களிலும் அமைக்கப்பட்டிருந்தது. போரில் வெற்றி பெற்ற மன்னர் பகை நாட்டினின்றும் கவர்ந்து வரும் அரச வெற்றிச் சின்னங்களுள் மகரதோரணமும் இடம் பெற்றிருந்தது என்பதை,

> "சங்கும் தொங்கலும் தாரையும் பேரிகையும்
> வெண்சாமரையும் மேகடம்பமும் சூகரக் கொடியும்
> மகர தோரணமும் ஒட்டக நிரையும்
> ....பாய்பரித் தோகையொடும் பறித்து"

என்ற வீரராஜேந்திரனின் மெய்க்கீர்த்தி வாசகங்கள் நமக்குப் புலப்படுத்துகின்றது.

பிற்காலத்தில் திருவண்ணாமலை, காஞ்சிபுரம், திருப்பதி போன்ற தலங்களில் விஜயநகர மன்னர்கள் எடுப்பித்த தோரண விளக்குகளைக் காண்கிறோம். அவர்கள் வழிவந்த நாயக்க மன்னர்கள் தஞ்சையிலும் மதுரையிலும் செஞ்சிப் பகுதியிலும் தோரண

விளக்குகளைக் கொடையளித்துள்ளனர். குறிப்பாக மதுரையை ஆண்ட திருமலை மன்னர் மீனாட்சி அம்மன் கோயில் முக்குறுணி விநாயகர் முன்பு எடுப்பித்த தோரண விளக்கு புகழ் மிக்கது. இதில் ஒருபுறம் திருமலை மன்னர் தன் தேவியருடனும் மறுபுறம் அவர் தம்பி முத்தியாலு நாயக்கர் தன் தேவியருடனும் தோன்றும் காட்சி மிகச் சிறிய சிற்பங்களாகக் காட்டப்பட்டுள்ளன. இவர் காலத்திய விளக்குகளில் இன்னும் சில அதன் கலைச்சிறப்புமறியாமல் கால் நூற்றாண்டுகட்கு முன்பு ஏலத்தில் விற்கப்பட்டு வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டன. நாயக்கருக்குப் பின் வந்த மராட்டிய மன்னர்களும் தஞ்சை, திருவிடைமருதூர், குடந்தை போன்ற ஊர்களில் மகர தோரண விளக்குகளை ஆலயங்களுக்கு அளித்துள்ளனர். சேதுபதி மன்னர்கள் மட்டுமன்றி இச்சீமையில் வாழ்ந்த இசுலாமியர்களும் இத்தகைய விளக்குகளை சிவாலயத்திற்குக் கொடையாக அளித்து மகிழ்ந்துள்ளனர். அத்தகைய விளக்கு ஒன்றினை இன்றும் உத்தரகோசமங்கையில் காணலாம்.

இவ்வகையில் அரச விருதுச் சின்னங்களுள் ஒன்றாகவும் இறைவன் திருக்கோயில் வாயில்களில் அலங்காரமாகவும் அமைக்கப் பட்ட மங்கலச் சின்னமான மகரதோரணங்களைச் சேதுபதி பரம்பரையில் பெண்ணரசி மங்களேசுவரி நாச்சியாரும் செய்தளித்து உயர்ந்த பெருமையும், நிலைத்த புகழும் பெற்றுவிட்டார் என்பதில் ஐயமில்லை.

மகரதோரண விளக்குகளில் உள்ள வாசகங்கள்

I 1. சாலிவாகன சகாற்த்தம் ௲ளாா௩௰௧க கலியுற்த்தம் ச௲ளாா௰
க்கு மேல் செல்லா

2. நின்ற சுக்கில ௵ மாகளி மீ ௰௧ உ திரவாரமும்
துதிகையும் புணற்பூச நட்செத்திரமும்

3. பிராமிய [க]ர்ம யோகமும் தைதுல வாகரணமும் சாத்திக
வேளையும் கூடின சுப தினத்தில்

4. இராமனாதபுரம் கோட்டை(யுள்)க்குளிருக்கிற மீனாட்சி
சுந்தரேசுவரர் கோவி

5. ல் அம்மன் சன்னிதானத்துக்கு ஸ்ரீமத் மகாராசராச ஸ்ரீ
இரணிய கெற்பயாசி ரவி

6. குலமுத்து விசைய ரெகுநாதராணி சேதுபதி மங்களேசுவரி நாச்சியாரவர்

7. கள் மகரதோரண விளக்கு ஈஎட்டுக்கு சதுக்கு பலம் நித்தம் சதா செருவை

II 1. பிரபவ ரூ காற்திகை மீ ௳ச உ சுக்கிர வார தினமும் த்ரயோதெ

2. சியும் சுவாதி ந(ு)ட்செத்திரமும் சோபந நாம யோகமும் போ

3. ஐ வாகரணமும் கூடிந சுபதினத்தில் இராமநாதபுர கோட்

4. டைக்குள்ளிருக்கிர மீனாட்சி சுந்தரேசுபர சுவாமி ச

5. ன்னிதானத்துக்கு மகரதோரண விளக்குச் செய்து வச்சது

6. ... . ஸ்ரீமத் மகாராச ரா[ச] இரணியகெற்ப யாசி ரவி

7. குல முத்து விசைய ரெகுனாத ராணி சேதுபதி மங்களே சுவரி நாச்சியா(ர்)

8. ரவர்கள் நித்த

9. ம் சதா சேரு

10. வை.

---

1. 'சேதுபதி மன்னர் செப்பேடுகள்'
இராமநாதபுரம் டாக்டர். எஸ்.எம். கமால்
செப்பேடு எண் 77, பக். 607 வெளியீடு: ஷர்மிளா பதிப்பகம் 21, ஈசா பள்ளிவாசல் தெரு, இராமநாதபுரம் 623501.

2. மேற்படி.

3. பதிவுப் பணி தொடர்பாகச் சென்னைப் பதிவு அலுவலர் திரு. மா. சந்திரமூர்த்தி அவர்கள் இம்மகரதோரணங்களை ஆய்வு செய்த போது வாசகங்கள் பொறிக்கப்பட்டிருந்ததைக் கண்டறிந்தார். துறை இயக்குநர் திரு. நடன. காசிநாதன் அவர்களின் ஆணைப்படி அவ்வாசகங்கள் இக்கட்டுரை ஆசிரியரால் படிக்கப்பட்டது.

ஆமன்னும் கிணறு

வெ. வேதாசலம்
தேர்வுநிலைக் கல்வெட்டாய்வாளர், மதுரை

ஆறறிவு அற்ற விலங்கினங்களுச்குக் கருணை காட்டும் பண்பு தொன்றுதொட்டுத் தமிழ் மக்களிடத்து இருந்து வந்துள்ளது அக் காலத்தில் மாடுகள் மேய்ச்சலின் போதும் நீர் அருந்தி வரும் வேளையிலும் உடலில் ஏற்படும் அரிப்பினைப் போக்குவதற்கு, வாய்ப்பாகச் சில ஏற்பாடுகளைச் செய்து வைத்தனர். அதற்காக வயல்வெளிகளிலும் நீர்நிலைகளுக்கு அருகிலும் கற்தூண்கள் பல வற்றை நட்டு வைத்தனர். இவற்றின் மீது சாய்ந்து உரசித் தனது உடலில் ஏற்படும் அரிப்பினை மாடுகள் போக்கிக் கொள்ளும். இக்கற்தூண்களை 'ஆதீண்டுகுற்றி' என்று அக்கால மக்கள் அழைத் தனர். தமிழிலக்கண உரையாசிரியரும் இச்சொல்லைத் தங்கள் இலக்கண உரை நூலில் எடுத்தாண்டுள்ளனர்.[1] மக்கள் தங்கள் வாழ்விற்குத் துணைநிற்கும் மாடுகளின் உணர்வைப் புரிந்து அவற்றிக்கு உதவி வந்த உயரிய பண்பை இது காட்டுகிறது.

இதேபோன்று கோடைகாலத்தில் குளங்கள் வற்றி நீரின்றித் தவிக்கும் மாடுகள் நீர் அருந்துவதற்கென்று கிணறுகளைத் தோற்றுவிக்கும் பண்பும் பாண்டி நாட்டில் இருந்திருக்கிறது. இதனை அண்மையில் கண்டறியப்பட்ட மாறவர்மன் சுந்தர பாண்டியனின் (கி. பி. 1238 - 1251) கல்வெட்டு ஒன்று தெரிவிக் கிறது இக்கல்வெட்டில் இக்கிணறு 'ஆமன்னும் கிணறு' என்று குறிப்பிடப்படுகின்றது[2] மாடு நீர் உண்ணும் கிணறு என்பது இதன் பொருளாகும். காமராஜர் மாவட்டம் விருதுநகர் வட்டத்திலுள்ள வெள்ளூர் என்ற சிற்றூர்க் கண்மாயின் கரையில் கிடக்கும் தூண் ஒன்றில் இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு பல அரிய வரலாற்றுச் செய்திகளைத் தருகின்றது. வெள்ளூர் தற்போது விருதுநகரிலிருந்து சிவகாசி செல்லும் வழியி லுள்ள ஆமத்தூருக்கு மேற்கே ஆறு கிலோ மீட்டர் தொலைவில் இருக்கிறது.

சாந்தன் கொற்றன்

வெள்ளூரில் கி. பி 13-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சாந்தன் கொற்றன் என்பவனே மாடுகள் நீர் குடிப்பதற்காகக் கிணற்றினைத் தோற்றுவித்திருக்கின்றான் கருநிலக்குடி நாடு என்ற பண்டைய உள்நாட்டுப் பிரிவு சிவகாசிப் பகுதியைச் சுற்றியமைந்த பகுதியைக் குறிக்கக் கல்வெட்டில் வழங்கப்பட்ட நாட்டுப் பெயராகும் இந் நாட்டிலேயே வெள்ளூரும் அமைந்திருந்தது வெள்ளூரில் வாழ்ந்த சாந்தன்கொற்றனே கருநிலக்குடி நாட்டிற்கு உரிமையுடைய தலைவனாகக் கருநிலக்குடி நாடு கிழவன் என்று அழைக்கப்பட்டான் இவனது தந்தை பெயர் சாந்தன் என்பதாகும் இவன் இப்பகுதி யில் பாண்டிய அரசின் அதிகாரியாகப் பணிபுரிந்திருக்க வேண்டும்

முனைகலக்கிகள்

கருநிலக்குடி நாட்டிற்கு வடக்கே செங்குன்றாபுரம், கள்ளிக்குடி முதலிய ஊர்களடங்கிய மற்றொரு பண்டைய நாட்டுப்பிரிவாகச் செங்குடி நாடு விளங்கிற்று இதேபோன்று நூற்றுக்கு மேற்பட்ட உள்நாட்டு நிலப்பிரிவுகளைப் பாண்டி நாடு அக்காலத்தில் கொண்டிருந்தது

செங்குடி நாட்டில் சாந்தன்கொற்றன் காலத்தில் பாண்டிய மன்னரின் 'முனைகலக்கிகள்' என்ற பெயரில் அமைந்த படைப்பிரிவு ஒன்று இருந்துள்ளது. போர்முனையில் முன்னணியில் நின்று எதிரி களின் படையைக் கலக்கும் ஆற்றல் பெற்றிருந்தமையால் இப்படைப்பிரிவிற்கு இப்பெயர் ஏற்பட்டிருக்க வேண்டும். கருநிலக் குடி நாடு கிழவனான சாந்தன்கொற்றன் இப்படைவீரர்களின் பெயரால் 'ஆமன்னும்' கிணற்றினைத் தோற்றுவித்தான் என்று வெள்ளூர்க் கல்வெட்டு தெரிவிக்கிறது இக்கிணற்றிக்குக் கற்கால், படிக்கட்டு, நீர் இறைப்பதற்குரிய ஏற்றம் முதலியவற்றினையும் சாந்தன்கொற்றன் அமைத்திருக்கின்றான் வறட்சிமிக்க பகுதியில் அமைந்த வெள்ளூரில் கோடைகாலத்தில் குளங்களில் தண்ணீர் வற்றி அதற்குத் தட்டுப்பாடும் ஏற்படுவது இயல்பாகும். இந்நிலையில் தவித்துவரும் ஆவிற்குத் தண்ணீர் இக்கிணற்றின் மூலம் இறைத்த அளிக்கப்பட்டிருக்க வேண்டும். தற்போது இப்பகுதிகளிலிருந்து இக்கிணறு தூர்ந்து போய்விட்டது. பாண்டி நாட்டில் வெள்ளூர்க் கல்வெட்டிலேயே 'முனைகலக்கிகள்' என்ற படைப்பிரிவினர் பற்றிய குறிப்பை முதன்முதலில் காண முடிகின்றது.

கிணற்றின் காலம்

இப்படைப்பிரிவின் பெயரால் சாந்தன்கொற்றன் அமைத்த கிணற்றின் காலத்தினைக் கல்வெட்டு தெளிவாகக் குறிப்பிடுகின்றது. இக்கிணறு கி.பி. 1249-ல் இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் காலத்தில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது கல்வெட்டில் இதற்கு இணையான சக ஆண்டு 1171 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் இவ்வாண்டிற்கு இணையான இக்காலத்தில் பாண்டிய நாட்டில் ஆட்சிபுரிந்த மாறவர்மன் சுந்தரபாண்டியனின் (கி பி. 1238-1251) பதினோராவது ஆட்சியாண்டும் கல்வெட்டில் கூறப் பட்டுள்ளது. இம்மன்னனின் ஆட்சி கி.பி. 1238-ல் தொடங்குகிறது. என்று ஏற்கனவே வரலாற்றாசிரியர்கள் கொண்ட முடிவினை இக்கல்வெட்டு உறுதிப்படுத்துகிறது எனலாம் வரலாற்றாசிரியர் களின் காலக்கணக்கின்படி இம்மன்னனின் பதினோராவது ஆட்சி யாண்டு கி.பி. 1249-லேயே வருகிறது. இதுபோன்று சக ஆண்டோடு அதற்கு இணையான மன்னர்களின் ஆட்சியாண்டும் பாண்டியர் கல்வெட்டுகளில் குறிப்பிடும் வழக்கம் மிக அருகிய அளவிலேயே காணப்படுகின்றது. பண்டைத்தமிழ் இலக்கியங்கள், செப்பேடுகள் மூலம் பாண்டியர்க்குப் பூழியன் என்ற பெயர் வழங்கப்பட்டிருப்பதை அறியமுடிகிறது. பூழியன் என்ற அப்பெயர் சுந்தரபாண்டியனுக் குரிய சிறப்புப் பெயராக இவ்வெள்ளூர்க் கல்வெட்டிலும் வருகிறது.

பாண்டிநாட்டு மக்களின் பண்பையும் சமூக, அரசியல் வரலாற் றினையும் உணர்த்தும் ஆசிரியவிருத்தத்தில் அமைந்த இக்கல்வெட்டு வாசகம் தமிழ்வல்ல புலவர் ஒருவரால் இயற்றப்பட்ட நற்றமிழ்ப் பாடலாக விளங்குகிறது.

[பூமன்னு] புகட் சகர[மோ] ராயிரத்தொரு நூற்றெழுபத்
 தொன்றிற் பூழியன் சுந்தரபாண்டியதேவற்கி
யாண்டு பத்தோடொன்றிற்
 காமன்னும் பொழில்புடைசூழ் கருநிலக்குடி நாட்டு
வெள்ளூர் வாழும் கற்பஞ்சாந்தன்
 சேய்கொற்றன் கருநிலக்குடி நாடு கிழவன்
தேமென்னும் மொழி வீரர் திகழும் செங்குடிநாடு சிறந்த
 மன்னர் சீர் ஆரு முனைகலக்கிகள் பேராற்

சிறந்தூழி வாழ
ஆமன்னும் கிணறு கற்கால் படி பக்கல் மீகாலடைவு
படச் செய்வித்தவனியின் மேல்
நிலைநிற்க வருளினானேய்

திருமஞ்சனக்கிணறு

இக்கல்வெட்டின் காலத்தினைச் சார்ந்த எழுத்தமைதியில் விளங்கும் மற்றொரு கல்வெட்டும் வெள்ளூர் கண்மாயில் காணப் படுகிறது. கருந்தடிநாட்டு வெள்ளூரில் இருந்த திருவிளங்கீசுவரம் என்ற சிவன்கோயில் இறைவன் பெயரால் 'திருமஞ்சனக்கிணறு' ஒன்றினைத் தோற்றுவித்ததை இக்கல்வெட்டு தெரிவிக்கிறது. இக்கிணற்றினை செல்வத்திருவாரூர் வல்லங்கிழையான் திருச்சிற்றம் பலமுடையான் என்பவன் எடுப்பித்துள்ளான். இக்கிணறு தற்போது இவ்வூரின் கண்மாய்கரையிலுள்ள பெருமாள் கோயிலுக்கு அருகில் உள்ளது.

---

1. அ. இராசேந்திரன், 'ஆதீண்டுகுற்றி', தொல்லியல் ஆய்வுத் தொகுதி, தொல்பொருள் தொழில்நுட்பப் பணியாளர் பண்பாட்டுக்கழகம், மதுரை 1985, பக். 23-28.

2. இக்கல்வெட்டு தொடர்பான தகவலைத் தந்தவர் திருத்தங்கல் ஆர். பாலச்சந்திரன் ஆவார் இக்கல்வெட்டின் பாவடிவை அறிவதற்கு உறுதுணை புரிந்தவர்கள் மதுரை தியாகராசர் கல்லூரிப் பேராசிரியர் திரு. தொ. பரமசிவன், கசந்தமிழ்க் கல்லூரி முதல்வர் அ. தெட்சிணாமூர்த்தி ஆகியோர் ஆவார் கள். மேற்கண்ட பெருமக்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாகூர் தர்காக் கல்வெட்டு

சில குறிப்புக்கள்

புலவர். செ. இராசு, எம்.ஏ.
கல்வெட்டியல் துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் - 5

சோழ நாட்டில் இசுலாமியர்

சோழ வளநாட்டின் கடற்கரைத் தலைநகரான காவிரிப் பூம்பட்டினம் சங்க காலத்தில் கடல் வாணிகத்தில் சிறந்து விளங்கியது. கரிகால் வளவன் காலத்தில் புகார் நகருக்குக் கடல் வழியாகப் பாய்மரக் கப்பல்களில் குதிரைகள் இறக்குமதியாயின என்று கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடியுள்ளார்.[1]

குதிரை வாணிகத்தில் சிறந்து விளங்கிய அரபுநாட்டு வணிகர் களே அக்காலத்தில் வந்திருக்க வேண்டும் பிற்காலத்தில் தமிழ் நாட்டுக்குத் தொடர்ந்து வந்த அராபியர் இசுலாமியத்தைத் தங்கள் சமயமாக மேற்கொண்டிருந்தனர்.

முதலாம் இராசராசன் காலத்தில் (985-1014) நாகப்பட்டினத்தில் அருகேயுள்ள சந்தமங்கலத்தில் இசுலாமிய அலுவலர் ஒருவர் இருந்ததை ஆனைமங்கலச் செப்பேடு கூறுகிறது.

> *'க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டுப் பட்டணக் கூற்றத்துப் பிரமதேயம் சந்நமங்கலத்துச் சபையோம் சொல்ல எழுதி னேன் இவ்வூர்க் கரணத்தான் மத்யஸ்தன் துருக்கன் அகமுதனேன். இவை என்னெழுத்தென்றும் இப்படி பிடி சூழ்ந்து பிடாகை நடந்து அறவோலை செய்து குடுத்தேன்'*

என்பது அப்பகுதியாகும்.[2] *இதனால் 10-ஆம் நூற்றாண்டின் இறுதியிலேயே நாகூர்ப் பகுதியில் இசுலாமியர் வாழ்ந்தது புலப் படுகிறது.*

தஞ்சைப் பெரிய கோயில் கல்வெட்டில் இராசராசன் காலத்தில் 'தஞ்சாவூர்ப் புறம்படியில் ராஜவித்யாதரப் பெருந்தெருவில் வாழ்ந்த சோனகன் சாவூர்ப் பரஞ்சோதி' என்னும் இசுலாமிய அலுவலர் இருந்தமை கூறப்படுகிறது.[3] பிற்காலத்தில் இவ்வதிகாரி கங்கைகொண்ட சோழபுரத்தில் பெருந்தர அரசு ஊழியராகவும் திருமந்திர ஓலை நாயகமாகவும் விளங்கியுள்ளான்.[4]

நாயக்கர் ஆட்சியில்

தஞ்சை நாயக்கரில் முதல் அரசனான செவ்வப்ப நாயக்கன் அதிராம்பட்டினத்தில் கலாரத் காகா அலாவுதீன் தர்காவைக் கட்டிக் கொடுத்துப் பல கொடைகளும் அளித்துச் செப்பேடும் வெட்டித் தந்துள்ளான்.[5] தஞ்சையில் உள்ள சமுகப்ரு பள்ளி வாசலுக்கு நாஞ்சிக்கோட்டை மண்ணையார்களைக் கொண்டு ஏழு வேலி நிலம் அளிக்கச் செய்தான்.[6] இவை முறையே 29-12-1521 அன்றும் 12-12-1550 அன்றும் நடைபெற்றன.

தஞ்சையை ஆட்சிபுரிந்த விஜயராகவ நாயக்கன் காலத்தில் (1634-1675) நாகூர் அசரத் சாதிர் ஒலி தர்காவில் முதல் வாசலில் உள்ள மினார் எனப்படும் கோபுரம் கட்டப்பட்டது. 9-7-1645 அன்று நாகூர் மதாறு ராவுத்தர், மீரா ராவுத்தர் இருவரும் கட்டியுள்ளனர்.

இச்செய்தியை அக்கோபுரத்தின் வடபுறச் சுவரில் வெட்டப் பட்ட கல்வெட்டு கூறுகிறது.[7]

1) பாத்திப வருஷம் ஆடிமாசம் 10 தேதி ஸ்ரீவிசையராவுக
2) நாயக்கய்யன் காரியத்துக்குக் கத்தரான
3) மதாறு ராவுத்தர் நாகூர் மீரா ராவுத்தர் முத
4) ல் வாசலில் கட்டின மினாற் மீரா ராவுத்தர் த
5) ற்மத்துக்கு அகிதம் பண்ணினபேர்
6) மக்கத்திலே அகிதம் ப
7) ண்ணின பாவத்திலே
8) போக கடவாராகவும் உ

9) கெங்கைக் கரையில் காரா
10) ன்பசுவை கொன்ற ப
11) ாவத்திலே போக கடவ
12) ராகவும் உ உ உ

மராட்டியர் நாளில்

தஞ்சை மராட்டியர் ஆட்சிக் காலத்தில் (1676-1855) பல இசுலாமியர்கள் சோழநாட்டுப் பகுதியில் குடியேறினர். படை வீரராகவும், அரண்மனைக் காவலர்களாகவும், வணிகர்களாகவும், யூனானி மருத்துவர்களாகவும், சமயச் சான்றோர்களாகவும் அவர்கள் குடியேறினர். உயர்ந்த நிலையில் பலர் அதிகாரிகளாகவும் விளங்கினர். இதனைப் பல்வேறு மருத்துவ இலக்கியங்கள், திருவிடைமருதூர் நொண்டி நாடகம், தஞ்சை சரபேந்திர பூபாலக் குறவஞ்சி போன்ற சிற்றிலக்கியங்கள் விரிவாகக் கூறுகின்றன.[8]

பல கல்வெட்டுகள் உருது, பாரசீக மொழியில் வெட்டப்பட்டன.[9] தமிழ்க் கல்வெட்டுகளில் உருதுச் சொற்கள் பல கலந்து பொறிக்கப்பட்டன.[10]

நாகூர் தர்கா முன் பெரிய கோபுரம் கட்டத் தஞ்சை மராட்டிய மன்னர் துளசா என்னும் துக்கோசி (1729-1735) நிலம் கொடையாக அளித்தார்.[11] அவருடைய மகன் பிரதாப சிங் (1739-1763) அக்கோபுரத்திற்கு 17-2-1753 அன்று கால்கோள் நாட்டி 20-1-1755 அன்று அதனைக் கட்டி முடித்தார்.

அதனைக் கட்டும் முயற்சிகளில் மராட்டிய அலுவலர்கள் ராமராசா, மானோசி செகதாப், ராமோசி நாயக்கர் ஆகியோர் ஈடுபட்டனர். அப்போது மராட்டியர் அதிகாரியாக நாகூர்ப் பகுதியில் ஷேக் அப்துல் மாலிக் என்பவர் இருந்த விபரம் தெரிகிறது.


பிரதாப சிங் நாகூர் தர்காவில் பெரிய மினார் கட்டிய செய்தி அம்மினாரில் மராத்தி, பாரசீகம், தமிழ்க் கல்வெட்டுகளாக வெட்டப் பட்டுள்ளன. மைய அரசின் தொல்பொருள் அளவீட்டுத் துறையினர் மராத்தி, பாரசீகக் கல்வெட்டுகளைப் படி எடுத்துள்ளனர்.[12] தமிழ்க் கல்வெட்டு இரண்டு பகுதிகளாக அம்மினாரில் வெட்டப் பட்டுள்ளது.

---

1. பட்டினப்பாலை - 185, 'நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்'
2. கல்வெட்டு ஓர் அறிமுகம், பக். 36-37, தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத்துறை வெளியீடு. 'துருக்கனகமுது' என்ற பெயரை 'துருக்கன் கமுது' என்று மைய, மாநில தொல் பொருள் துறையினர் படித்துப் பதிப்பித்துள்ளனர்.
3. South Indian Inscriptions, Vol. II No. 95, ... சோனகன் என்பது இசுலாமியரை அக்காலத்தில் குறித்த சொல். சாஹூர் என்ற சொல் 'ஜாஃபர்' என்ற சொல்லின் திரிபாக இருக்கலாம்.
4. Epigraphia Carnatica, Vol. X No.3.
5. தஞ்சை நாயக்கரின் முதல் செப்பேடு, தமிழ்ப் பல்கலைக் கழகக் கல்வெட்டியல் துறையின் கண்டுபிடிப்பு, புதுக்கோட்டை இசுலாமியச் சிற்றிலக்கிய மாநாட்டு மலர், 1992.
6. ARE 294 of 1964
7. ஆவணம் எண் II ப. 15, தமிழகத் தொல்லியல் ஆய்வுக் கழக வெளியீடு, திருவருட் பேரவை இரண்டாவது மாநில மாநாட்டுச் சிறப்பு மலர் 1992, ப. 135. இக்கல்வெட்டைத் தமிழ்ப் பல்கலைக் கழகக் கல்வெட்டியல் துறை கண்டு பிடித்தது.
8. புலவர் செ. இராசு, தஞ்சை மராட்டியர் கல்வெட்டுகள், முன்னுரை, பக். 28 தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு.
9. மேலது, ப. 10.
10. மேலது. ப. 10 அமீனா, அவுல்தார், ஐவேஜ், கலில், கஜம், கஜானா, கார்பார், சிரஸ்தார். தாசீல், பர்க்கானா, மகால், மிராசு, யதாஸ்து, ரஸ்தா, உசூர்.
11. தஞ்சை மாராட்டியர் கல்வெட்டுக்கள், ப. 184.
12. ARE 293 of 1964; ARE (D) 163 of 1964. தமிழ்க் கல்வெட்டு கள் தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வெட்டுத் துறையினரால் படி எடுக்கப்பட்டது.

— இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்

இரங்கல்



அ. இரராசேந்திரன்

சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டம் செந்தாரப்பட்டியில் 1945-ஆம் ஆண்டு பிறந்தார். தந்தை அய்யாக்கண்ணு, தாயார் சம்பூர்ணம். இவர் தம் பள்ளி, கல்லூரிப் படிப்பினைச் செந்தாரப் பட்டியிலும், சேலம் வேலூரிலும் மேற்கொண்டார். தமிழிலக்கியத்தில் முதுகலைப் பட்டப்படிப்பினைக் கேரளப் பல்கலைக் கழகத்தில் முடித்தார். அண்மையில் 'போகர் 7000 - இலக்கியங்கள்' என்னும் தலைப்பில் டாக்டர் பட்டத்திற்கான ஆய்வேட்டினைப் புதுவைப் பல்கலைக்கழகத்தில் சமர்ப்பித்துள்ளார்.

1975-ல் தொல்பொருள் ஆய்வுத்துறையில் கல்வெட்டாய்வாளராகப் பணியில் சேர்ந்தார். கவிதை, இலக்கியம், கல்வெட்டு, வரலாறு, மருத்துவம், மொழி பெயர்ப்பு ஆகிய துறைகளில் பெரிதும் ஈடுபாடு கொண்டவர்.

'சேலம் மாவட்டக் கோயில்கள்', 'வரலாற்றில் சில புதிய ஏடுகள்', 'வஞ்சிப்பூக்கள்', 'சித்தர்களின் மருத்துவம்', இரானின் 'ஆத்ம வேதனை' (கவிதைத் தொகுப்பு) 'தரங்கம்பாடி டேனிஷ் கோட்டை' (அச்சில்) ஆகிய நூல்களை எழுதியுள்ளார். இளவேனில், ஆய்வுத்தொகுதி, தொல்லியல் கருத்தரங்கு (தொகுதி-2) திருக்கீழ்வேளூர் உலா ஆகிய நூல்களின் பதிப்பாசிரியர் ஆவார்.

கடந்த 20 ஆண்டுகளாகத் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையில் கல்வெட்டாய்வாளராகவும், காப்பாட்சியராகவும் பணியாற்றிய **திரு. அ. இராசேந்திரன்** அவர்கள் கடந்த 2-6-95 அன்று இயற்கை எய்தியதை எண்ணிப் பெரிதும் வருந்துகிறோம். இவரது மறைவு கல்வெட்டு உலகுக்கு இவ்வாண்டில் ஏற்பட்டுவிட்ட ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.